DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.1/2018**

Deposition of witness for Prosecution அ.சா.7

| | | |
|---|---|---|
| பெயர் | : | சந்திரசேகர் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சேது |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 24.03.2026

2 ம் எதிரி ராஜா ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஒய்வு பெற்றுவிட்டேன். கடந்த 03.06.2016 ம் தேதி சண்முகராஜா என்பவர் 18.30 மணிக்கு ஆறாவயல் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவை பெற்று சார்பு ஆய்வாளர் மலைச்செல்வம் குற்ற எண்.73/2016, இதச பிரிவுகள் 454, 457, 380 கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்துள்ளார். பின்பு அவர் பணிமாறுதலில் சென்று விட்டார். **(மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம்**

**முறையே அ.சாஆ.11 மற்றும் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை சார்பு ஆய்வாளர் மலைச்செல்வம் விசாரித்துள்ளார். பின்பு சார்பு ஆய்வாளர் மலைச்செல்வம் பணி மாறுதலில் சென்றுவிட்டார். நான் 16.08.2016 ம் தேதி ஆறாவயல் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பொறுப்பேற்றுக்கொண்டேன். 16.10.2016 ம் தேதி எதிரிகளை ஒத்தக்கடை சோதனைச்சாவடி அருகில் வைத்து தேவகோட்டை நகர் காவல் நிலைய ஆய்வாளர் செங்குட்டுவன் அவர்கள் காவல் நிலைய வழக்கிற்காக கைது செய்து அவர்கள் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார். பின்பு எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அடிப்படையில் 1 ம் எதிரியின் வீட்டில் இருந்து இந்த வழக்கின் திருடுபோன பொருட்களான வெள்ளி குத்துவிளக்கு-1, வெள்ளி காமாட்சி விளக்கு-1, வெள்ளி சந்தன பேழா-1, வெள்ளி பொட்டு கிண்ணம்-1, வெள்ளி சங்கு-1 ஆகியவற்றை ஆய்வாளர் செங்குட்டுவன் கைப்பற்றியுள்ளார். (**மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சாஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி பொருட்களை படிவம் 91 மூலம் நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். (**மேற்படி படிவம் 91 அ.சாஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்பு எதிரிகளை சம்பிரதாய  கைது செய்து இந்த வழக்கில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்பு பட்டியல் சாட்சிகள் 1, 2 ஆகியோரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு பட்டியல் சாட்சிகள் 7, 8 ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 12.12.2026 ம் தேதி வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 457,380 ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல்

செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

புகார்தாரர் கொடுத்த புகாரை சரிவர புலன்விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் இடம் செல்லாமல் சாட்சிகளை காவல் நிலையம் வரவழைத்து மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எதையும் சரிவர புலன்விசாரணை செய்யாமல் தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் கைது செய்யப்பட்ட 2 எதிரிகளிடமிருந்து பொருட்கள் மீட்கப்பட்டதாக காண்பித்து பொய்யாக எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் முழு விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.